# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

கார்த்திகை - மார்கழி 2015 நிலா | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 36





**பிரான்சில் இந்த வருடத்தின் பாரிய நிகழ்வு**, ஆயிரக்கணக்கானோரின் உழைப்பில் வடிவமைக்கப்பட்டு ஆரம்பிப்பதற்கு சில நாட்களே இருக்கும் நிலையில், நிலமை தலைகீழாக மாறியுள்ளது. 195 நாடுகளின், முடிவெடுக்கும் அதிகாரம் கூடிய தலைவர்கள் ஒன்று கூடும் இம்மாநாட்டிற்கு நவம்பர் 13 தாக்குதல்கள் பேரிடியாக இறங்கியுள்ளன.

உலகநாடுகள் அனைத்தின் கண்களும் பிரான்ஸ் தலைமை யில் கூடவிருக்கும் இம்மாநாட்டிலேயே நீண்டகாலமாக நிலைத்து நிற்கின்றன. ஏனென்றால் புவி வெப்பமடைதல் தொடர்பான அடுத்த கட்ட நகர்வுகள் பிரான்சின் தலைமை யிலேயே முன்னெடுக்கப்படவுள்ளன. ஆனால், பிரான்சில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களும், பாதுகாப்பு நிலவரங்களும் பதட்டமான சூழலையே தோற்றுவித்துள்ளது.

தாக்குதல்களுக்குப் பின்னர் இம்மாநாட்டை நடத்த முடியுமா என்ற கேள்விக்கு அதிபர் பிரான்சுவா ஹொலந் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். திட்டமிட்டபடி மாநாடு நடக்கத்தான் போகிறது. மேலும், பயங்கரவாதத்துக்கு பிரான்ஸ் ஒருபோதும் பணிந்து கொடுக்காது எனவும் இம்மாநாடு பிரான்சிற்கு மீண்டும் ஒரு நம்பிக்கையையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும் தருணமாக அமையும் எனவும் அதிபர் பிரான்சுவா ஹொலந் சூளுரைத்துள்ளார்.

1995ம் ஆண்டு முதல் வருடந்தோறும் இம்மாநாடு நடைபெற்று வருகின்றது. இவ்வருடம் நடைபெறுவது 21வது மாநாடாகும். புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றங்கள் இவற்றிற்கு எதிராக எமது வருங்கால சந்ததியினரை கருத்திலிருத்தி எதிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தை இம்மாநாடு வலியுறுத்துகிறது. இவ்இலக்கை அடைய முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகள் எட்டப்படுகின்றன.

சூழல் பாதுகாப்பு மாநாடுகளில் முக்கியமானதாகக் கருதப்படும் COP மாநாடு, ஐக்கியநாடுகள் சபை

2ம் பக்கம் பார்க்க..


நிலா
www.nilafrance.com
தொடர்புகளுக்கு :
சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94 sangeethafrance@gmail.com




யின் சுற்றுச்சூழல் மற்றும் தட்ப வெப்பநிலை மாற்றம் தொடர் கட்டமைப்பினுடன் இணைந்தே ஒன்று கூட்டப்படுகின்றது.

பூமியின் தட்ப வெப்பநிலை மாற்றத்தில் முக்கிய பங்கு வகிப்பது மனித செயற்பாடுகளால் வெளியேற்றப்படும் CO2 (கரியமிலவாயு), மீத்தேன், ஈத்தேன், நீராவி, ஓசோன் என பலதரப்பட்ட வாயுக்களின் கலவை யாகும். இவ்வாயுக்களின் கலவை பூமியின் வளிமண்டலத்தில் அதிக அளவில் கலப்பதனாலேயே பூமி வெப்பமடைகின்றது.

மேற்குறிப்பிட்ட வாயுக்களின் கலவை பைங்குடில் வாயுக்கள் (Gaz à effet de serre) என அழைக்கப்படுகின்றன. இவையே வளிமண்டலத்தில் அதிகரித்து சூரிய கதிர்களின் சக்தியை தடுத்து பூமியில் வெப்பநிலை அதிகரிப்பை ஊக்குவிக்கின்றன. பூமி வெப்பமடைதலை ஊக்குவிக்கும் இவ் வாயுக்களின் அடிப்படை, தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகை என்பது குறிப்பிடத்தக்கது.

வேளாண்மை விரிவாக்கம் மற்றும் மக்கள் தொகைப் பெருக்கம் ஆகிய காரணிகளால் வளிமண்டலத்தில் உள்ள பைங்குடில் வாயுக்கள் சராசரி அளவுகளிலிருந்து வேகமாக மாற்றம் பெற்று அதிகரித்துள்ளன. இந்த அதிகரிப்பே பூமி வெப்பமடைதலை நோக்கி இட்டுச் செல்கின்றது. 19ம் நூற்றாண்டோடு ஒப்பிடுகையில் பைங்குடில் வாயுக்களின் அளவு 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.




80 சதவீத பைங்குடில் வாயுக்கள் உலகின் தொழிற்துறையில் முன்னணி வகிக்கும் 15 நாடுகளால் வெளியேற்றப் படுகின்றன. இந்நாடுகளுள் பிரான்ஸ் முன்னிலையில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பூமி வெப்பமடைதலின் விளைவு பல நூற்றாண்டு காலப் பனிப்பாறைகள் உருகி கடலில் கலக்கின்றன. இதனால் கடலின் நீர்மட்டம் உயர்கின்றது. கடலின் நீர்மட்டம் உயரும் பட்சத்தில் பல தீவுகள் முற்றாக அழியும் அபாயத்தில் உள்ளன.**
**மேலும், நாம் பார்க்கும் கேட்கும் வெள்ளப்பெருக்குகள், பருவம் தவறிய அதீத மழை, தொடர் வரட்சி, நாம் சுவாசிக்கும் காற்றின் நச்சுத்தன்மை என நீண்ட அனர்த்த பட்டியல் எம்முன் விரிகின்றது.**

**இம்மாநாட்டின் முக்கிய நோக்கங்கள் :–**

❍ ஒவ்வொரு நாடும் பூமி வெப்பமடைதலை தடுப்பதற்கு தேசிய அளவில் எடுக்கப்பட்ட முடிவுகளை வெளியிடவேண்டும்.

❍ அபிவிருத்தியடைந்த நாடுகள் இதுவரை காலம் அளித்த உறுதிப் பாடுகளை நடைமுறைக்குட்படுத்த வேண்டும்.

❍ பைங்குடில் வாயுக்களின் அதீத வெளியீட்டைக் குறைப்பதற்கான திட்டங்களை செயற்படுத்துவதற்கான காலதாமதங்களை பகிரங்கப்படுத்த வேண்டும்.

❍ அபிவிருத்தியடைந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகளின் பைங்குடில் வாயு வெளியேற்றத்தை தடுக்கும் திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும். உதாரணம் சூரியசக்தி, காற்று சக்தி அடிப்படையிலான மின்சக்தி திட்டங்கள் எனப் பல முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

இவற்றையெல்லாம் விட பிரான்சில் நடைபெறும் 21வது மாநாடு மிகவும் முக்கியமானது. ஏனெனில், இதுவரை ஏற்படுத்தப்பட்ட உடன்பாடுகள், திட்டங்கள், உறுதியளிப்புகள் என ஒன்றிணைந்த நடவடிக்கைகள் 2020ம் ஆண்டு செயற்படுத்தப்படவுள்ளன. இதற்காக பிரான்ஸ் மாநாட்டில் உலகநாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

பூமிப்பந்தின் நலன் குறித்த மானிடத்தின் எதிர்காலம் குறித்த முடிவுகள் இந்த இக்கட்டான சூழலில் பிரான்சில் எடுக்கப்படுவது பிரான்சுக்கும் பிரான்ஸ் நாட்டு மக்களுக்கும் பெருமையே என சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆர்வலர் Nicolas Hulot புளகாங்கிதம் அடைகிறார்..

இவற்றையெல்லாம் செயற்படுத்த உலக பொருளாதார, அரசியல் நிலைமைகள் இடம் அளிக்க வேண்டும். ●





சங்கீதா அச்சகம்

39, Bd. de la Chapelle
75010 Paris
M°: La Chapelle
Gare du Nord

sangeethafrance@gmail.com
Tél. / Fax :
01.44.72.08.94




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# பாரிசில்
# ஒரு இலட்சம் வீடுகள்
# வெறுமையாக!

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், வதிவிட நெருக்கடிக்குள் மக்கள் சிக்கித்தவிக்கையில், ஒரு இலட்சம் தொடர்மாடி வீடுகள் வெறுமையாகவே கிடக்கின்றன. இவற்றின் தொகையைக் குறைக்கும் முகமாக பாரிஸ் மாநகர–சபை இங்குள்ள கட்டிட முகாமையாளர்களுடன் ஒப்பந்தம் செய்து பாரிசில் வெற்றிடமான வீடுகளை வாடகைக்குவிட முயல்கின்றது.

இப் பிரச்சனையின் கடினத்தைக் குறைக்க நடுத்தர வர்க்கத்தினருக்கும் வேலை செய்யும் இளையோர்களிற்கும் வெற்றிடமாக உள்ள வீடுகளை வாடகைக்குவிட பாரிஸ் நகரசபை நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

வெற்றிடமாக உள்ள தொடர்மாடி வீடு–களை வாடகைக்குவிட முன்வருபவர்களிற்கு வீட்டைத்திருத்த 6000 € தொடக்கம் 14000 € வரை மாநகரசபை வழங்க முடிவெடுத்துள்ளது. அத்துடன் வீட்டு உரிமையாளர்கட்கு ஒழுங்கான வாடகை கிடைப்பதற்கான உறுதியையும் வழங்குகின்றது. மேலும் வாடகை செலுத்தப்படாத நிலைமை ஏற்படின், மாநக ரசபை அவர்களின் வாடகையை நிபந்தனைகளுடன் செலுத்தவும் உறுதியளிக்கின்றது.






இவ்வாறான சில சலுகைகளை தொடர்மாடி உரிமையாளர்கட்கு வழங்குவதன்மூலம் பூட்டிக் கிடக்கும் ஒரு இலட்சம் வீடுகளில் பெரும்பகுதியை வாடகைக்கு விடமுடியும் என்று பாரிஸ் மாநகரசபை எதிர்பார்க்கின்றது.

ஆனால், பூட்டிக் கிடக்கும் தொடர்மாடி வீடுகளை வாடகைக்கு விடும்போது, நடப்பு வாடகையை விட 20% குறைவான வாடகைக்கு வீடுகளை கொடுக்கவே மாநகரசபை பரிந்துரைக்கின்றது. ❍

**அண்மையில்** TF1 தொலைக்காட்சியிலிருந்து வெளியேறிய Claire Chazal க்கு அவரது 25 வருட சேவையை கருத்தில் கொண்டு வெளியேற்றுத் தொகையாக இரண்டு மில்லியன் யூரோக்கள் TF1 நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இத்தகவலை அடுத்து Télé 2 Semaines இதழ், தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர்களின் ஊதியங்களை வெளியிட்டுள்ளது.

2000ம் ஆண்டு காலப்பகுதியில் அதிக ஊதியம் பெறுபவராக (மாதம் 71 ஆயிரம் யூரோக்கள்) Patrick Poivre d'Darvon முன்னிலை வகித்துள்ளார். தற்போது மாதம் 50 ஆயிரம் யூரோக்கள் சம்பளத்துடன் முன்னிலையை TF1 செய்திவாசிப்பாளரான Jean Pierre Pernaut தனது இடத்தை தக்க வைத்துள்ளார். TF1 தொலைக்காட்சியில் 40 வருட சேவையில் உள்ளார். TF1 தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்ட 1975ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறார். கடந்த 27 வருடங்களாக 13H00 செய்திவாசிப்பாளர் என பிரபலமானவர், இவர் தொலைக்காட்சியின் மூத்த உறுப்பினர், இவற்றையெல்லாம் விட நாளாந்தம் இவரது செய்தியறிக்கை 40 சதவீதத்துக்கும் அதிகமான மக்களால் கவரப்படுகின்றது என்பதும் சாதனையே.

மற்றைய தொலைக்காட்சிகளைப் பொறுத்தவரை செய்தி வாசிப்பாளர்களின் உயர் சம்பளமாக மாதம் 7 ஆயிரம் யூரோக்கள் முதல் 15 ஆயிரம் யூரோக்கள் வரை நடைமுறையில் உள்ளதாக Télé 2 தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு செய்தியறிக்கையும் வெளியாவதற்குப் பின்னின்று உழைக்கும் ஊடகவியலாளர்களின் ஊதியம் செய்திவாசிப்பாளர்களின் ஊதியங்களை விட பல மடங்கு பின்தங்கியே உள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.




Patrick Poivre d'Darvo




**செய்திவாசிப்பாளர்** Jean Pierre Pernautன்
**மாதாந்த ஊதியம்**
**ஐம்பதினாயிரம் யூரோக்கள்!**



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



வரலாற்றில் மறக்கப்பட்ட

## பாரிஸ் நகரின் முதலாவது கறுப்பின நகரபிதா !

Severiano de Heredia (1836-1901) 1879ம் ஆண்டு பதவி வகித்த பாரிசின் முதலாவது கறுப்பின மேயராவார். பின்னர் 1887ல் தொழிற்றுறை அமைச்சராகவும் பதவி வகித்தார். கியூபாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் 1845ல் பிரான்சுக்குப் புலம்பெயர்ந்து 1870ல் பிரான்ஸ் குடியுரிமை பெற்றார். அன்றைய காலகட்டத்தில் காலனித்துவத்துக்கும், மதச்சார்பின்மைக்கும் எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். ஆனால் இன்று பிரான்சுக்குப் பெருமை சேர்த்த வரலாற்று மாந்தர்களின் பட்டியலில் இவர் கறுப்பர் என்றவொரு காரணத்துக்காகவே இருட்டடிக்கப்பட்டுள்ளார் என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்து.

Severiano de Heredia பிரான்ஸ் வரலாற்றில் மறக்கப்பட்ட மனிதர் எனக்குறிப்பிட்ட தற்போதைய பாரிஸ் மேயர் Anne Hidalgo இன்று வரை அவரின் பெயர் சுமந்த ஒரு வீதியோ, ஒரு மண்டபமோ இல்லாமல் நிராகரிக்கப்பட்டது. ஒரு இருட்டடிப்பே எனவும் இன்னும் பாரிஸ் மாந–கரச் செயலகத்தில் இவரின் ஒரு புகைப்படம் கூட இல்லாதது வருந்தத்தக்கதே எனவும் தெரிவித்துள்ளார்.

இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்யும் வகையில் பாரிஸ் 17 பகுதி வீதியொன்றிற்கு இவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பெயர்ப்பலகை அங்குரார்ப்பணத்தை Anne Hidalgo அவர்கள் 5 ஒக்டோபர் அன்று திறந்து வைத்து மரியாதை செய்துள்ளார்.





வயாவிளான் மக்கள் ஒன்றியத்தின்
ஒன்றுகூடல்
27.03.2016
இடம் :
தமிழ்ச்சோலை மண்டபம்
8, Rue de la Philosophie, 93140 Bondy


# எகிப்துக்கு விற்பனையாகும் ரஸ்யப் போர்க்கப்பல்கள்

பிரான்ஸ் நீண்டகாலமாக முடிவெடுக்க முடியாமல் திண்டாடிய ரஸ்யப் போர்க்கப்பல் விவகாரத்திற்கு இறுதியாக நல்ல முடிவு கிட்டியுள்ளது.

ரஸ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் விதித்த பொருளாதாரத் தடையின் பின்னணியில் ரஸ்யாவுக்கான இரண்டு போர்க்கப்பல் கட்டுமான ஒப்பந்தத்தைப் பிரான்ஸ் ரத்துச்செய்தது. போர்க்கப்பல்கள் இரண்டும் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தமும் கைவிட்டுப் போக கடந்த ஒரு வருடமாக யானையை வைத்து தீனி போட்ட கதையாக பராமரிப்புச் செலவீனங்கள் (மாதம் 5 மில்லியன் யூரோக்கள்) கட்டுக்கடங்காமல் நீள பிரான்ஸ் அரசு செய்வதறியாது திண்டாடி வந்தது.



சுயஸ் கால்வாய் திறப்பு விழாவுக்கு எகிப்துக்கு சென்ற அதிபர் ஹொலந் ஆரம்பித்து வைத்த பேச்சுவார்த்தைகள் சுமூகமான முடிவுக்கு வந்துள்ளது. இரண்டு போர்க்கப்பல்களையும் வாங்குவதாக எகிப்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. 995 மில்லியன் யூரோக்களுக்கு வியாபாரம் முடிக்கப்பட்டுள்ளது. ரஸ்யாவுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த 1, 2 மில்லியாட் யூரோக்களிலும் பார்க்க குறைவான விலைதான். அரசதரப்பு தெரிவிக்காவிட்டாலும் இந்தப் போர்க்கப்பல் விவகாரம் பிரான்ஸ் அரசுக்கு 2 மில்லியாட் செலவீனத்தை ஏற்படுத்தியுள்ளதாக Le Canard Enchaîné செய்திகள் அடிக்கோடிட்டுக் கூறியுள்ளது.


பிரான்ஸ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் ஒளிவிழா
20.12.2015 - 14h45
50, Place Torcy
M°: Marx Dormoy

தமிழ் ஒலி
உலக தமிழர்களை ஒன்றிணைக்கும் வானொலி
Tel (office) : 0033 148371675
Fax : 0033 148450956
For Live Programs: 0033 148321540
Skype : trttamil
Mail : trtnews@hotmail.fr
Website: http://www.tamilolli.com/

நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச்சங்கம் நடாத்தும்
தீப விழா
07.02.2016

இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

எங்கள் 16 வருட கால அனுபவம் உங்களுக்கான நிறைந்த சேவையை வழங்குகிறது!

# Autre Vue

**OPTICIEN**

*Donnez un sens à votre Regard*

Jusqu'à **40%** Sur les Montures optiques*
**25%** Sur les Solaires*

*voir conditions au magasin

## பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்

சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ் வகைகள் மேலும் பலவிதமான நவீன கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue அத்துடன் உங்களுக்கான இலவச ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.

**உங்களது தேவை ! எங்களது சேவை !**



Mutuelle, CMU
ஊடாக தரமான
கண்ணாடிகளை
பெற்றுக்கொள்ளலாம்



எமது புதிய கிளை:

Autre Vue
58, Av. Flandre - 75019 Paris
Tél / Fax : 09 66 91 54 04 / 01 42 80 54 04
M° : Riquet (Ligne 7)

Autre Vue
23 rue lamartine - 75009 Paris
Tél / Fax: 01 53 20 04 10
09 67 33 12 83
email: autrevueparis09@gmail.com



# Yahoo மின்னஞ்சல்
## கடவுச்சொல் தேவையில்லை!

1994ம் ஆண்டு உருவகம் கொண்ட அமெரிக்க நிறுவனமான Yahoo தனது மின்னஞ்சல் சேவையில் புதிய அதிரடி மாற்றங்களைக் கொண்டுவரவுள்ளது.
1994ல் வெறும் இணையத்தளம் பட்டியலிடு தளமாக தனது சேவையை ஆரம்பித்து பின்னர் மின்னஞ்சல், தேடுதளம், குறுஞ்செய்திப் பரிவர்த்தனை, இணையத்தள இட வழங்கி என இன்னும் பல புதிய விரிவாக்கங்களுடன் தனது சேவைகளை அகட்டிக்கொண்டது. 2004ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி உலக அளவில் அதிக வருகையாளர்களைக் கொண்ட இணையத்தளமாக தன்னைப் பறைசாற்றியுள்ளது. Yet another Hierarchical officious Oracle என்பதன் குறுகிய பதமே Yahoo ஆகும்.

Yahoo மின்னஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்டு இன்று 18 வருடங்களுக்குப் பின்னர் தனது புதிய சகாப்தத்தை நோக்கிக் காலடி எடுத்து வைத்துள்ளது. கடவுச் சொற்கள் அற்ற வேகமான மின்னஞ்சல் முறையை நடைமுறைப்படுத்தவுள்ளது. Account key என அழைக்கப்படும் இப்புதிய கடவுச் சொல்லுக்கான மாற்று முறை ஸ்மார்ட் போன்களின் உதவி யுடன் செயற்படவுள்ளன. ஒவ்வொரு முறை மின்னஞ்சலில் நுழையும் போதும், உங்கள் ஸ்மார்ட் போன் தொலைபேசிக்கு வரும் குறுஞ்செய்தி விண்ணப்பத்தை அனுமதிப்பதன் மூலம் நுழைவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இப்பயன்பாட்டு முறைக்கு ஸ்மார்ட் போன் தொலைபேசி இன்றியமையாததாகின்றது. இத் தொலைபேசி இல்லாவிட்டாலோ அல்லது தொலைந்தாலோ நீங்கள் மீண்டும் கடவுச்சொல் முறையை கையிலெடுக்கக் கூடிய வசதி நிச்சயமாகச் செய்து தரப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.



# பரீட்சார்த்த ஓட்டத்தில் தடம்புரண்ட TGV

பிரான்சுக்கு சோதனைமேல் சோதனை. பாரிசின் பல இடங்கள் பயங்கரவாத தாக்குதல்களிற்கு உள்ளான அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு முன்னர் மறுநாள் அதிவேக புகையிரதமான TGV தடம்புரண்டு கால்வாய் ஒன்றினுள் வீழ்ந்துள்ளது.
இணைக்கப்பட்டிருந்த பயணிகள் பெட்டிகள் இருப்புப் பாதையை விட்டு விலகி சேறும்
சகதியும் நிரம்பிய மைதானம் போன்ற இடத்தில் பரவிக் கிடந்தன. சோதனை ஓட்டம் மொசெல் / ஸ்ரார்ஸ்பேர்க் ( Moselle / Starsbourg ) நகரங்களிற்கிடையில் நடைபெற்றது. விபத்தின்போது சில பயணிகள் பெட்டிகள் தீப்பிடித்துக் கொண்டன. சோதனை ஓட்டம் என்பதால் பயணி கள் இதில் செல்லவில்லை. விபத்தின்போது 11 பேர் கொல்லப்பட்டும் 33 பேர் காயத்திற்கும் உள்ளாகினர்.

அதிவிரைவுத் தொடருந்தின் இரண்டாங் கட்ட நவீன வண்டிகளே தற்போது பரீட்சார்த்தம் பார்க்கப்பட்டவையாகும். விபத்திற்கும் பயங்கர வாதத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த TGV மணிக்கு 350 கிலோமீட்டர் வேகத்தில் பயணித்துள்ளது. தொடருந்து இவ் வேகத்தில் செல்லக்கூடியதாயினும் இது சென்ற இரும்புப்பாதை இவ்வளவு அதிக வேகத்தில் செல்வதற்கு ஏற்றதல்ல என்றும், இதில் ஓர் கட்டற்ற வேகத்தை சாரதி கூட்டியதாகவும் மனிதத் தவறே விபத்திற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதி வேக புகையிரதமான (TGV) பிரான்சில் 1981 இல் சேவைக்கு வந்தன. TGV சேவை ஆரம்பித்த பின்னர் 1992 - 1997 - 2000 - 2001 - 2002 ஆண்டுகளில் விபத்தில் சிலர் சிறுகாயங்களிற்குள்ளாகினர். TGV சேவையின் 34 ஆண்டுகளான பின்னர் 14.10.2015 இல் தான் விபத்தில் (11) மரணங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் TGV இன் கட்டுமானம் மிகவும் சிறப்பாகவே உள்ளதாக கணிக்கப்படுகின்றது.




# உலகின் சக்தி வாய்ந்த நகர்
## பட்டியலில் பாரிஸ் மூன்றாவது இடம்!

வருடா வருடம் 40 பெரு நகரங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு இத்தகமை முன்வைக்கப்படுகின்றது. ஒவ்வொரு நகரினதும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி, கலாச்சாரப்பரிவர்த்தனை, வீட்டு வசதி, சூழல் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து மேம்பாடு ஆகியவற்றின் அடிப்படைகளைக் கேள்விக்குள்ளாக்கி இத்தகைமை முன்மொழியப்படுகின்றது.
பாரிஸ் நகர் மேம்படுத்த வேண்டிய புள்ளிகளாக சுற்றுச்சூழல் பாதுகாப்புச் செயற்பாடு, தொழிற்றுறை வர்த்தக ஸ்தாபனங்களை கவர்ந்திழுக்கத் தேவையான லாவகம் ஆகியவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஆளுமைமிக்க சக்திவாய்ந்த நகரப்பட்டியலில் லண்டன், நியுயோர்க்குக்கு அடுத்து மூன்றாம் இடத்திலிருக்கும் பாரிஸ் நகர், மக்கள் சிறப்பான முறையில் வாழ்வதற்கு வாழ்க்கைத்தரம் உயர்வான நகரப்பட்டியலில் முதலாவது இடத்தில் இருப்பதும் பெருமையே. சிறப்பான கலாச்சாரத் தகை மைகள் அடர்த்தியான வரலாறு, பாரம்பரிய சிறப்புகள், நகரின் அழகான கட்டமைப்பு மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு என்பன பாரிஸ் நகருக்குப் பாராட்டுகளை பெற்றுக்கொடுத்துள்ள புள்ளிகளாகும். இருப்பினும் புறநகர் கட்டமைப்பிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தப்புள்ளிகளில் பாரிஸ் நகர் பின்தங்கி 26வது இடத்தில் இருக்கிறது.

இத்தெரிவுகளையும் ஆய்வுகளையும் ஜப்பானைச் சேர்ந்த நகர வடிவமைப்பு மற்றும் நகர அழகியல் ஆய்வகம் நடாத்தியுள்ளது.

பாரிஸ் லாச்சப்பலில்

# கோபால் அன் கோ

# GOPAL & CO

இலங்கை இந்தியாவிற்கு
மிகக் குறைந்த விலையில்
கதைப்பதற்கு Kish Mobile!




வாடிக்கையாளர் வசதி கருதி ....

**லாச்சப்பலில்...**
72, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle

**பொபினியில்...**
205, AV. JEAN JAURES,
93000 BOBIGNY.
Tram 1: La Ferme

**Tél : 09 51 56 76 52   Fax : 01 46 07 13 03**

# பிரான்சில் இருந்து வெளியேறும் புலம்பெயர்ந்தோர் தொகை அதிகரிப்பு!



● பிரான்சில் அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் வருகை கட்டுக்கடங்காமல் அதிகரித்து உள்ளது.
● பிரான்சை விட்டு வெளியேறும் புலம் பெயர்ந்தோரின் தொகையும் 2006ம் ஆண்டோடு ஒப்பிடும் போது மூன்று மடங்காக உயர்ந்துள்ளது.
இத்தகவலை பிரான்சின் தேசிய புள்ளியியல் மற்றும் பொருளாதார ஆய்வகமான L'insee தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்தோர் குடிவரவை கணக்கில்கொள்ளும் நிக்கோலா சார்க்கோசியும், மரின் லூப்பெனும் புலம்பெயர்ந்தோரின் குடிஅகல்வையும் கருத்தில் கொள்ளவேண்டும் என பிரான்ஸ் ஊடகவியலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வெளியேறுபவர்களில் அதிகமானவர்கள் வெளிநாடுகளிலிருந்து கல்வி கற்பதற்காக பிரான்சுக்கு வந்தவர்களாகவே உள்ளனர். இவர்களை விட குறிப்பிட்ட காலம் மட்டும் பிரான்சில் வேலை செய்வதற்காக வந்தவர்கள் மற்றும் வேலையிலிருந்து இளைப்பாறி தமது நாடுகளுக்குத் திரும்புபவர்களும் கணிசமான எண்ணிக்கையில் இடம்பிடித்துள்ளனர்.

மேலே குறிப்பிடப்பட்டவர்கள் வெளிநாடுகளில் பிறந்து பிரான்சிற்கு புலம் பெயர்ந்தவர்கள். இவர்களை விட பிரான்சில் பிறந்த வெளிநாட்டவர்களின் திரும்புதல்களும் அதிகரித்து வருவதாக ஆய்வகம் மேலும் தெரிவிக்கின்றது.

# சமூக மருத்துவ பாதுகாப்பு மையத்தினூடு 200 மில்லியன் யூரோக்கள் மோசடி!

பிரான்சில் சமூகச் சுகாதாரப்பாதுகாப்பு மையம் (Sécurité sociale) தொடர்ந்து கடனில் தத்தளித்து வருவது நீண்ட கால நிதர்சனம். இந்த வருட வரவுசெலவுத்திட்ட சமர்ப்பிப்பின் போது, பற்றாக்குறைத்தொகையை 10 மில்லியாட் யூரோக்களாக குறைக்க வேண்டும் எனப் பாராளுமன்றத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நிலைமைகள் இவ்வாறிருக்க 2014ம் ஆண்டில் மட்டும் சமூக சுகாதாரப்பாதுகாப்பு மையத்தின் மீதான மோசடி 17 சதவீதத்தால் உயர்ந்து 200 மில்லியன் யூரோக்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏமாற்று வேலைகளில் அதிகம் ஈடுபடுபவர்கள் மருத்துவத் தொழிற்றுறை சார்ந்தோரே எனும் அதிர்ச்சியான தகவலை சமூகச் சுகாதாரப்பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக மருத்துவர்கள், வைத்தியசாலைகள், அம்புலன்ஸ் சேவையாளர்கள் மற்றும் மருத்துவ உபகரண விநியோகஸ்தர்கள் என நீண்ட பட்டியலுடன் தகவலை வெளியிட்டுள்ளனர்.

● மருத்துவத்துறையினர் – மருத்துவர்கள், பார்மசிகள்
● செவிலியர்கள் – 73.1 மில்லியன் யூரோக்கள்
உதாரணமாக மருத்துவர் நோயாளியின் வீட்டுக்கு வருகை தந்ததாக கற்பனையான படிவங்களை தாமே நிரப்பி கூடுதல் தொகையை அறவிட்டுள்ளனர்.
● வைத்தியசாலைகள், மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகள் – 52.6 மில்லியன் யூரோக்கள்
● பொது மக்கள் – 38.8 மில்லியன் யூரோக்கள் கணவன் அல்லது மனைவியின் வருமானத்தை அறிவுறுத்தாது(CMU - C) நலன் பெறுவோர் போன்றோர்
● மருத்துவ உபகரண விநியோகஸ்தர்கள் 6,9 மில்லியன் யூரோக்கள்
● இறுதியாக Sécurité sociale அமைப்பை ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்ட குழுக்கள் 2.9 மில்லியன் யூரோக்கள்

பொய்யான வணிக நிறுவனங்களை ஆரம்பித்து பணியாளர்களுக்கு கற்பனையான மருத்துவ விடுப்பு கொடுத்ததாகப் பெறப்படும் அறவீடுகள்.

மேற்குறிப்பிடப்பட்டவர்களில் பொதுமக்கள் வெறும் 20 சதவீதத்தையே பிரதிபலிக்கின்றனர். மீதி 80 சதவீதமும் மருத்துவ தொழிற்றுறைசார் நிறுவனங்களேயாகும் என Sécurité sociale தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.



லாச்சப்பலில்
New Design Textiles
N D
புத்தாண்டை முன்னிட்டு
சிறப்புத்தள்ளுபடி!
சிறப்புத்தள்ளுபடி!
புதுவருடத்தில் உங்கள் வாழ்வு
மேலும் சிறக்க எங்கள்
மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!
நியூ டிசைன்
ரெக்ஸ்ரைல்ஸ்
புத்தம் புதிய டிசைன்கள்
Gare du Nord
RER ல்
இருந்து
100 m
தூரத்தில்
M La Chapelle
Rue du Faubourg Saint-Denis, Paris
NEW DESIGN TEXTILES
Rue Demarquay
Gare du Nord RER
Tél : 07 53 94 04 01
10, Rue Demarquay, 75010 Paris



# Société Géneralé

## கிளைகளின் எண்ணிக்கையை குறைக்க முடிவு!

பிரான்சில் 1864 இல் Société Générale வங்கி உருவாக்கப்பட்டது. தற்போது 2000 கிளைகளுடன் இயங்கும் வங்கி பிரான்சில் தனது கிளைகளை 20 வீதத்தினால் 2020ம் ஆண்டுக்கு முன்னர் குறைக்க முடிவு செய்துள்ளது. Online சேவையை மேம்படுத்தி முன்னகரவே இக்கிளைக்குறைப்புகள் எனத் தெரிவித்துள்ளனர்.

வங்கியின் வாடிக்கையாளர்கள் மாதத்திற்கு ஒரு முறை வங்கிக்கு நேரடியாக சென்று வந்தனர். வாடிக்கையாளர்கள் வங்கிக்கு செல்லும் தொகை 2007 இல் 57% ஆகவும் 2012 இல் 42% ஆகவும் குறைந்தது. இதன் காரணமாக 2020ம் ஆண்டளவில் 400 கிளைகள் பிரான்சில் மூடப்பட்டுவிடும். இதே வேளையில் 2000 வேலையாட்கள் வங்கிகளில் இருந்தும் குறைக்கப்படுவர்.

வங்கியின் எதிர்கால முக்கிய திட்டமாக இலகு பங்குச் சந்தை (Boursorama) முறையை நடைமுறைக்குக் கொண்டு வரத் திட்டமிடப்படுகின்றது.

எதிர்வரும் ஐந்தாண்டு காலப் பகுதியில் இத்திட்டத்தின்மூலம், தற்போதிருக்கும் 7 இலட்சம் வாடிக்கையாளர்களை 20 இலட்சம் வாடிக்கையாளர்களாக உயர்த்துவதே முக்கிய நோக்கமென Société Générale தெரிவித்துள்ளது.



குவைத் விமானச்சேவையின் ஆதரவுடன் பிரான்ஸ் கிரிக்கற் சம்மேளனம் நடாத்திய கிரிக்கற் சுற்றுப்போட்டி 27 செப்.2015 பிரான்சில் நடைபெற்றது. Dreux மற்றும் Northern அணிகள் இறுதிச்சுற்றுக்கு முன்னேறின. அதில் அணி Dreux வெற்றிபெற்றது.



வழிபாடு செய்யுங்கள்..
கடவுளுக்கு அருகில் நீங்கள் செல்லலாம்...
ஆனால், சேவை செய்யுங்கள்..
கடவுள் உங்களுக்கு அருகில் வருவார்! - அன்னை தெரேசா








இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# பொதுப்போக்குவரத்தே உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது !

உங்கள் நாளாந்தங்களில் பொதுப்போக்குவரத்துகளான பஸ், மெத்ரோ பயணங்களை தொடர்ந்து பயன்படுத்தினால் இருதயநோய்கள், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற வியாதிகள் உங்களை அணுகாது. நாளாந்தம் கார்களில் பயணம் செய்பவர்களே அளவுக்கதிகமான உடல் உபாதைகளுக்கு உள்ளாகின்றனர். துவிச்சக்கரப் பயணங்களிலும் பார்க்க பொதுப்போக்குவரத்துப் பயணங்கள் பலமடங்கு சிறந்தவை. இத் தகவல்களை இதய நோய்கள் தொடர்பான ஜப்பானிய ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெவ்வேறு விதமான போக்குவரத்து முறை–களை பயன்படுத்தும் 6000 பேரின் தரவுகளின் அடிப்படையிலேயே இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இங்கும் வயது, ஆண், பெண், புகைப்பழக்கம் உடையவர்கள் எனத்தரவுகளில் ஏற்ற இறக்கங்கள் அவதானிக்கப்பட்டுள்ளதையும் அவர்கள் குறிப்பிடத்தவறவில்லை.

எந்தவிதமான போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்துபவர்களாயினும் நாளாந்த உடல் உழைப்பு அல்லது உடற்பயிற்சி இருப்பின் நோய்கள் எதுகும் அணுகாது எனவும் அடிக்கோடிட்டுள்ளனர்.

பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் இராக சங்கமம் நிகழ்வில் இந்த ஆண்டு (2015) **திரு. நாகலிங்கம் இந்திரநாதன்** அவர்கள் ஈழத்தமிழ்விழி எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.







**13 நவம்பர் தாக்குதல்கள்** சினிமாத்துறையையும் விட்டு வைக்கவில்லை. 18 நவம்பர் வெளியாகவிருந்த Made in France திரைப்படத்தின் வெளியீடு ஜனவரி 2016க்கு பின் தள்ளப்பட்டுள்ளது.

Made in France, 13 நவம்பர் சோகத்தை ஒத்த திரைப்படமாகும். ஜிகாத் இயக்கத்துக்குள் ஊடுருவும் பிரான்சைச் சேர்ந்த இஸ்லாமிய மத செய்தியாளருக்கு ஜிகாத் போராளிகளால் பாரிஸ் Champs-Elysées இலும் இன்னும் சில பகுதிகளும் நவம்பர் 13 போன்ற தாக்குதல்கள் திட்டமிடப்படுகின்றது என்ற தகவல்கள் கிடைக்கின்றன. பின்னர் என்ன நடந்தது என்பது திரைப்படமாக விரிகிறது. தற்போதைய இக்கட்டான சூழலில் பாதுகாப்புக் காரணங்கள் கருதி வெளியீட்டை நிறுத்தக் கோரப்பட்டுள்ளது. அத்துடன் திரைப்படப் போஸ்டரையும் மாற்றியமைக்க பணிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் இரண்டு திரைப்படங்களான Taj Mahal, இது 26 நவம்பர் 2008 பம்பாய் Taj Mahal hôtel தாக்குதல்கள் தொடர்பானது. மற்றயது Les Cowboys பிரான்சைச் சேர்ந்த 16 வயது யுவதி ஜிகாத் இயக்கத்தில் இணைந்துவிட அவளைத் தேடியலையும் தந்தையின் கதை. இக்கதையும் பிரான்சில் நடந்த உண்மைக்கதை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு படங்களின் வெளியீடும் நிறுத்தப்பட்டாலும் பின்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## உலகின் பட்டதாரிகள்

உலகின் முன்னணி நகரங்களுள் இலண்டன் நகரம் அதிகளவிலான பட்டதாரிகளை வேலையில் இணைத்துக் கொண்டுள்ளது. பெருநகரங்களில் வேலைசெய்வோரில் இலண்டனில் 53வீதத்தினரும், பாரிசில் 41 வீதத்தினரும், பேர்லின் நகரில் 37வீதத்தினரும், பணிபுரிகின்றனர்.

இவற்றிற்கு அடுத்ததாக அமெரிக்காவில் நியுயோர்க் (32%), லொஸ்ஏன்ஜெல் (31%) போன்றவற்றில் பட்டதாரிகள் தரத்திற்கு மேலானவர்கள் வேலை செய்கின்றனர்.

உலகின் பல நாடுகளை காலனிகளாகக் கொண்டிருந்த பிரித்தானியா உலகின் பல பாகங்களில் இருந்தும் கல்விக்காக மாணவர்களை தன்னகத்தே இழுத்துக் கொண்டிருக்கின்றது. இறுதிக் கணக்கெடுப்பின்படி 2013இல் இலண்டனில் 99 360 பட்டதாரிமாணவர்களும். இரண்டாவது நிலையில் பாரிஸ் 96782 பட்டதாரிமாணவர்களும், மூன்றாவது இடத்தில் நியூயோர்க் 60791 பட்டதாரிமாணவர்களும் கற்கின்றனர்.

எதிர்பார்ப்புகளிற்கு மாறாக குட்டி நாடான சிங்கப்பூரில் உழைப்பாளிகளில் 26வீதத்தினரும் அதிகுறைந்த படிப்புநிலை பட்டதாரிகளாவார். ஏழாவது இடத்தில் 20% கல்வியாளர்களைக் கொண்ட நாடாக டோக்கியோ நகரம் மிளிர்கின்றது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# உங்கள் பிள்ளைகளின் கல்வியை மேலும் மேம்படுத்த நாங்கள் உதவுகிறோம்...!

# MAHAJANA Master Institute

## 2007 இலிருந்து இதுகாலவரை.....

ஆங்கில மொழிக் கல்வியில் மிகவும்
பெறுமானமுள்ள வெற்றிகளைப் பெற்ற நாம்
தற்போது எமது கல்விநிலையத்தை
**கணிதம் – பிரெஞ்சு – ஆங்கிலம்**
என விரிவுபடுத்தியுள்ளோம்

*“It’s the symbol of hope for the ever evolving future for your younger generation”*



**குறிக்கோள் (*Aim*)**

- எமது மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான தேவையை அறிந்து பிரெஞ்சு கல்வி பாடத்திட்டத்திற்கமைய வழிப்படுத்தி நற்பிரஜைகளாக்க உதவுதல்.


**எமது சிறப்பம்சங்கள்**

- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள்
- பிரெஞ்சு *Lycée / Collége*களில் கற்பிக்கும் *BAC+6* தகமை கொண்ட ஆசிரியர்கள்
- ஐரோப்பிய தரத்திலான நவீன வகுப்பறைகள்
- பெற்றோர்கள்  மாணவர்களின் மன நிறைவு
- மாணவர்களின் தரத்திற்கமைவான வகுப்பறைத் தேர்வுகள்
- ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களை படிக்கும் பிள்ளைகளைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கான விஷேட கட்டணச்சலுகை
- மாணவர்களை ஊக்கப்படுத்த விஷேடமாக வடிவமைக்கப்பட்ட செயற்பாடுகள்

இவற்றுடன் இன்னும் பல புதிய விடயங்களுடன் எதிர்காலத்தை நோக்கி.......

**Renseignements et Inscriptions au 06 11 68 82 50.**

# MAHAJANA Master Institute




| PRIMAIRE (TOUT NIVEAU) | COLLEGE (TOUT NIVEAU) | LYCEE (TOUT NIVEAU) |
|---|---|---|

- **COURS D'ANGLAIS** **(Lundis et Mercredis)**

Programmes de UNIVERSITY OF CAMBRIDGE BRITISH COUNCIL

- o Starters 7, 8 ans
- o Movers 9, 10, 11 ans
- o Flyers 12, 13 ans
- o KET 13 ans et plus
- o PET
- o FCE

- **SOUTIEN SCOLAIRE** **(Mercredis et Samedis)**
  (Tout niveau)
  - o Niveau Primaire (CP – CM2)
  - o Niveau Collège ($6^{\text{ème}}$ – $3^{\text{ème}}$)
  - o Niveau Lycée ($2^{\text{nd}}$ – Terminale)

- **COURS DE MATHEMATIQUES** **(Samedis et Dimanches)**
  - o Niveau Collège ($6^{\text{ème}}$ – $3^{\text{ème}}$)
  - o Niveau Lycée ($2^{\text{nd}}$ – Terminale)

- **COURS DE FRANÇAIS** **(Samedis et Dimanches)**
  - o Niveau Collège ($6^{\text{ème}}$ – $3^{\text{ème}}$)
  - o Niveau Lycée ($2^{\text{nd}}$ – Terminale)

- **COURS DE DANSE – Bharathanatyam** **(Samedis)**
  - o Tout niveau et débutants.

- **COURS DE FRANÇAIS Pour adultes.** **(Tous les jours)**










RER B : (La Courneuve Aubervilliers) ல் இருந்து 5 நிமிட நடைதூரம்

Métro : (La Courneuve) ல் இருந்து பஸ் இலக்கம் 173 ஊடாக வந்து Hemet தரிப்பிடத்தில் இறங்கவும்

**7, Rue Emile Zola,93120 La Courneuve.**

# துயர் பகிர்வு

**வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்**



அமரர்
**செபஸ்தி அந்தோனிப்பிள்ளை**
(யாழ்ப்பாணம்)
தோற்றம் : 23. 01. 1942
மறைவு : 02 . 09. 2015



அமரர்
**நாகமுத்து சோமசுந்தரம்**
(நயினாதீவு, பிரான்ஸ்)
தோற்றம் : 28. 07.1927
மறைவு : 21. 10. 2015



அமரர்
**நாகமணி தங்கராசா**
(ஏழாலை வடக்கு, மடகஸ்கார்)
தோற்றம் : 18. 02. 1941
மறைவு : 05. 09. 2015



அமரர்
**நடராசா கனகாம்பாள்**
(உரும்பிராய், பிரான்ஸ்)
தோற்றம் : 13. 10. 1937
மறைவு : 08. 10. 2015



அமரர்
**சரஸ்வதி சுப்பிரமணியம்**
(வடமராட்சி நவிண்டில், லண்டன்)
தோற்றம் : 06. 02. 1932
மறைவு : 10. 09. 2015



அமரர்
**சவிரிமுத்து ஆரோக்கியம்**
(ஊர்காவற்றுறை, பிரான்ஸ்)
தோற்றம் : 12. 08. 1926
மறைவு : 30. 10. 2015



அமரர்
**நித்தியானந்தம் நந்தகுமார்**
(கொழும்பு, ஜேர்மனி)
தோற்றம் : 26. 12. 1962
மறைவு : 27. 09. 2015



அமரர்
**கார்த்திகேசு குமாரசாமி**
(புங்குடுதீவு, பிரான்ஸ்)
தோற்றம் : 11. 11. 1954
மறைவு : 01. 11. 2015



அமரர்
**சுப்பையா நடராசா**
(யாழ். சுழிபுரம்)
தோற்றம் : 12. 04. 1939
மறைவு : 30. 09. 2015



அமரர்
**கதிரவேலு கமலாம்பிகை**
(புங்குடுதீவு, பிரான்ஸ்)
தோற்றம் : 05. 05. 1933
மறைவு : 05. 11. 2015



அமரர்
**புழனிஆண்டவர் பத்மராஜ்**
(ஊர்காவற்றுறை, பிரான்ஸ்)
தோற்றம் : 05. 02. 1989
மறைவு : 08. 10. 2015




அமரர்
**வாரித்தம்பி சிதம்பரம்**
(மீசாலை வடக்கு)
தோற்றம் : 08. 02. 1932
மறைவு : 09. 11. 2015



அமரர்
**முத்துச்சாமி நாகராசா**
(காரைநகர், பிரான்ஸ்)
தோற்றம் : 21. 03. 1931
மறைவு : 09. 10. 2015



அமரர்
**திருநாவுக்கரசு திருமாறன்**
(வேலணை கிழக்கு, பிரான்ஸ்)
தோற்றம் : 03. 12. 1969
மறைவு : 13. 11. 2015



அமரர்
**டேவிற் ஐயா**
(யாழ்ப்பாணம்)
தோற்றம் : 24. 04. 1924
மறைவு : 11. 10. 2015



அமரர்
**திருவாசகம் சஞ்சீதரன்**
(நயினாதீவு, பிரான்ஸ்)
தோற்றம் : 21. 03. 1983
மறைவு : 04. 10. 2015



அமரர்
**நாகலிங்கம் விஜயகுலசிங்கம்**
(வட்டுக்கோட்டை, பிரான்ஸ்)
தோற்றம் : 19. 02. 1948
மறைவு : 20. 10. 2015



அமரர்
**கந்தையா சுந்தரலிங்கம்**
தோற்றம் : 24. 04. 1947
மறைவு : 19. 10. 2015



## உலகின் மிக நீளமான வீதிகள்

1. La Panaméricaine - 48000 km
வட அமெரிக்காவின் Alaska விலிருந்து தென் அமெரிக்காவின் மிகக் கீழ்ப்பகுதியான Ushuaïa வரை நீள்கின்றது. இந்த வீதியின் மூலம் 14 நாடுகளைக் கடந்து செல்ல முடியும்.

2. AH1 (Asian Highway) ஆசியாக்கண்டம் 20557km
துருக்கித் தலைநகர் இஸ்தான்புல் இருந்து ஜப்பானின் டோக்கியோ வரை செல்ல முடியும்.


3. Highway 1 அவுஸ்திரேலியா 14500 Km
அவுஸ்திரேலியாவின் அனைத்து மாகாணத் தலைநகரங்களையும் இணைக்கின்றது. நாளுக்கு ஒரு மில்லியன் பாவனையாளர்கள். பிரான்சின் அனைத்து Auto-route களை ஒன்று சேர்த்தாலும் இத்தனை நீளம் வராது.

4. Transsibérienne ரஸ்யா 11000 km
ரஸ்யாவின் மேற்கு மூலையா–ன Saint-Pétersbourg லிருந்து தென்கிழக்கு மூலை Vladivostok வரை செல்கின்றது.

5. Transcanadienne கனடா 8030 km
கனடாவின் 10 மாகாணங்களை ஊடறுத்துச் செல்கின்றது. 5 முறை நேரமாற்றம் செய்ய வேண்டும் என்றால் தூரத்தைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.




**சுற்றுச்சூழல்** பாதுகாப்பின் தேவை கருதி பிரான்சில் ஈமைக்கிரிகை செய்யும் முறைகளும், கல்லறைகளும் சூழலுக்கு மாசு ஏற்படாத வண்ணம் மாற்றம் பெறவுள்ளன.



# Bio கல்லறைகள்

இறந்தவரின் உடல் அடக்கம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் பெட்டியும் சூழல் மாசுபாட்டிற்கு காரணமாகிறது. பெட்டியில் காணப்படும் மெர்க்குரி முதற்கொண்ட உலோகங்களிலிருந்தும், ஏனைய அலங்கார மற்றும் வர்ணப் பொருட்களிலிருந்தும் வெளியாகி மண்ணில் ஊறும் நச்சு வாயு மிகவும் அபாயமானது என அறிவுறுத்திய சூழல் பாதுகாப்பு ஆவலர்கள் இவற்றிற்கெல்லாம் தீர்வு காணும் விதமாக பிரான்சின் குறிப்பிட்ட சில நகரசபைகளுடன் இணைந்து சூழல் பாதுகாப்புத் துறையினரால் சூழலுக்கு மாசு இல்லாத கல்லறை முறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இயற்கையாக, இலகுவாக மக்கக் கூடிய மரத்தாலான பெட்டிகளில் அடக்கம் செய்தல், மேல் வெறும் புற்தரையும் ஒரு மரமும் நாட்டப்படும் என Bio கல்லறை முறையை விளக்கியுள்ளனர்.

பிரான்சின் முதலாவது இயற்கைக் கல்லறை பிரான்சின் தென்மேற்குப் பகுதியான Niort ல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முறையை நாங்கள் ஒரு புரட்சியாக முன்வைக்கவில்லை. மாறாக ஒரு விழிப்புணர்வுத் திட்டமாகவே கையிலெடுத்துள்ளோம் என Niort மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.
இந்த முறை பல உலக நாடுகளையும் கவனிக்க வைத்துள்ளது. இயற்கைக்கல்லறை முறை வெவ்வேறு நாடுகளிலும் உதித்து வருவது தமக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# கருத்தரிப்பு
## ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸ் முன்னணி

2015 இல் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் ஐரோப்பிய நாடுகளுள் கருத்தரிக்கும் வீதத்தில் பிரான்ஸ் முன்னணியில் உள்ளது. இந்த நாடுகளில் கருத்தரிப்பு வீதம் என்பது சனத்தொகைப் பெருக்கத்தோடு மாத்திரம் நின்றுவிடாமல் நாட்டினது வளர்ச்சிப்போக்கு, மற்றும் வேலை வாய்ப்பு, வரி வசூல் போன்றவற்றிலும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஐரோப்பிய ரீதியில் சனத்தொகை வளர்ச்சியானது குறைவாக இருக்கின்ற வேளையில், பிரான்சில் பெண்ணொருவர் சராசரியாக இரண்டு குழந்தைகளுக்கு தாயாக உள்ளார்.

உலக அளவில் கருத்தரிப்பு கூடிய நாடுகளாக நைஜர் (Niger) (7.03), மாலி(6.25), சோமாலியா(6.17), போன்ற நாடுகள் முன்னணியில் உள்ளன. கடைசி இடத்தில் சிங்கப்பூர்(0.79) இருக்கிறது. இந்தியாவில் சராசரி கருத்தரிப்பு வீதம் 2.55 ஆகவும் இலங்கையில் 2.15 ஆகவும் உள்ளன.



# பிரான்சில் பாதுகாப்பு குறைந்துவிட்டது

- நிக்கோலா சார்க்கோசி

Les Républicains கட்சித்தலைவரான நிக்கோலா சார்க்கோசி. வெளி நாட்டவர்களின் வருகை தொடர்பாக அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் நிலைப்பாடு பற்றி தனது காட்டமான கருத்துக்களை முன்வைத்துள்ளார். பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் அதிகாரங்கள் அற்ற அரசாக வெறும் பார்வையாளராக மட்டுமே தற்போதய அரசு செயற்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரான்சின் சோசலிச அரசு பிரான்சில் நடக்கும் குற்றங்கள் தொடர்பாக வெளியிடும் புள்ளிவிபரங்கள் தவறானவை. குற்றங்கள் குறைவாக நடப்பதாகப் புள்ளிவிபரங்களைக் காட்டி தமது ஆட்சியைத் தக்க வைப்பதே அவர்களது நோக்கம். எனது ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு நிலவரங்கள் இவ்வாறு இருக்கவில்லை எனப் பல புள்ளிவிபரங்களை மேலும் அடுக்கியுள்ளார்.

தொடர்ந்து சார்க்கோசியின் தாக்குதலுக்குள்ளாகும் நீதியமைச்சர் Christiane Taubira வை இம்முறையும் விட்டு வைக்கவில்லை. சிறைகளில் கைதிகளைக் குறைக்கிறேன் என குற்றவாளிகளை வெளியில் உலாவவிடுவதால் பிரான்சில் குற்றங்கள் பெருகி வருகின்றன என்றார். தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் எவ்விதமான மாற்றங்களை, தண்டனை முறைகளை அமுல்படுத்துவேன் என நீளமான அறிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக உடனடி எதிர்வினை ஆற்றிய பிரான்ஸ் பிரதமர் மனுவல் வால்ஸ், பிரான்ஸ் அரசை அதிகாரங்களற்ற அரசு எனக் குறிப்பிடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது எனவும், தான் வெளிப்படுத்தும் கருத்துகளில் நிதானத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

oct.2015






இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

2019ல்

## 4வது மெற்றோ தடமும் தானியங்கி முறையில் ....




14வது மெற்றோ தடம், முழுமையாக தன்னிச்சையாக இயங்கும் உலகின் முதலாவது தானியங்கி வழித்தடமாகும். இது 1998ம் ஆண்டில் பாரிசில் சேவைக்கு வந்தது.

இத்தடத்தில் நாளாந்தம் 5 இலட்சம் பயணிகள் பயணிக்கின்றனர். மேலும் இத்தடம் சென் – தெனிஸ் / ஒர்லி வரை (St. Denis / Orly) வரை நீட்சி பெறும்போது நாளாந்தம் 1 மில்லியன் பயணிகளை இத்தடம் சுமந்து செல்லும். அண்மைய நிகழ்வொன்றில் RATP நிறுவனத்தின் தலைவி எலிசபெத் போர்ன் ( Élisabeth Borne) 100 கோடி (1 மில்லியாட்) பயணிகளை இத்தடம் சுமந்து சென்றதை பெருமையுடன் நினைவுகூர்ந்துள்ளார்.

2016ம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து 4வது மெற்றோ தடம் தானியங்கி (Automatique) முறையில் செயற்படுத்துவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. நான்காவது மெற்றோ தடத்தில் தானியங்கி வண்டிகளின் சேவை 2019ம் ஆண்டிலிருந்து சேவைக்கு வரும்.


ஸ்ருதிலயா வானம்பாடிகள்
தொடர்புகளுக்கு : 06.20.76.28.77

சுருதிலயாவின் வானம்பாடிகள் 2015 இறுதிப் போட்டியிலே வெற்றிபெற்றோர் ...

**9 வயதுக்கு உட்பட்டவர்கள்**
ஜீவராஜா ப்ரிதியங்கரா
சத்தியநாதன் அமேலியா
சத்தியநாதன் சுபீட்சா

**12 வயதுக்கு உட்பட்டவர்கள்**
ஸ்ரீசுதேஸ்கரன் வருஷினி
ஸ்ரீதரன் ஆரபி
சிவனேசராஜா தேனுகா (UK)

**16 வயதுக்கு உட்பட்டவர்கள்**
சகாதேவன் சிந்துஜா
சிவானந்தராஜா ஆரபி
சகாதேவன் பானுஜா

**22 வயதுக்கு உட்பட்டவர்கள்**
சிவலோகநாதன் நிஷாங்கனி
குலசேகரம் சதுரசியா (Swiss)
ரவீந்திரன் அலன்

**35 வயதுக்கு உட்பட்டவர்கள்**
மதனராஜா திபானி
சுகுமார் சுதாஜினி
குணரத்தினம் ஜீவகன்

**35 வயதுக்கு மேற்பட்டவர்கள்**
சத்தியநாதன் சர்மிளா
ஜெரோம் ராதிகா
இசாக் தஃப்சீர்

ஸ்ருதிலயா வானம்பாடிகள் விருதை வென்று முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டவர்கள்
1. திபானி
2. சிந்துஜா
3. நிஷாங்கனி







இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு


# பிரான்சில் தொலைபேசி இலக்கங்கள்...

1896ம் ஆண்டில் பிரான்சில் 5 இலக்க தொலைபேசி இலக்கங்கள் பாவனைக்கு வந்தன.
தொலைபேசி பாவனை அதிகரித்ததைத் தொடர்ந்து 1912ம் ஆண்டில் இருந்த 5 இலக்கத்துடன் மேலதிக எழுத்தொன்றும் சேர்க்கப்பட்டது.

தொலைபேசி இலக்கம் மீண்டும் மாற்றம் பெற்று 1953ம் ஆண்டிலிருந்து பிரான்சில் 100% இலக்கங்களில் மாத்திரம் தொலைபேசி எண்கள் பாவனைக்கு வந்தன.

30 ஆண்டுகளிற்கு முன்னதாக 25 அக்டோபர் 1985ம் ஆண்டில் 7 இல் இருந்து 8 இலக்கத்திற்கு தொலைபேசி எண்கள் மாற்றத்திற்குள்ளாகின.



8 இலக்கம் உள்ள தொலைபேசி எண்கள் போதாமையினால் 18 அக்டோபர் 1996ம் ஆண்டு இரவு 11 மணியிலிருந்து 10 இலக்க தொலைபேசி எண்கள் பவணைக்கு வந்தன.

பிரான்சில் தொலைபேசி எண்களின் பாவனை அதிகரித்தபடியால் Ile-de-france இல் 01 இலக்கமும், வடமேற்கு பகுதிக்கு 02 இலக்கமும் , வடகிழக்குப் பகுதிக்கு 03 இலக்கமும், தென்கிழக்கு பகுதிக்கு 04 இலக்கமும், தென்மேற்கு பகுதிக்கு 05 இலக்கமும் மேலதிகமாக சேர்க்கப்பட்டன.

தற்போது 06 அல்லது 07 இலக்கங்களில் கைத்தொலைபேசி இலக்கங்கள் பிரான்சில் ஆரம்பமாகின்றன. 08 இல் தொடங்குகின்ற இலக்கங்கள் வர்த்தக தொடர்புகளில் பாவனையில் உள்ளன.

09 இல் இருந்து ஆரம்பிக்கும் இலக்கங்கள் செப்ரம்பர் 2006ம் ஆண்டில் இருந்து புழக்கத்தில் உள்ளன. 09 தொடர் இலக்கங்கள் பிராந்திய ரீதியாக இல்லாமல் பிரான்ஸ் முழுவதற்கும் பாவிக்கக்கூடிய இலக்கங்களாகும்.


உங்கள் மங்கள வைபவங்களுக்குத் தேவையான தரம் - சுவை நிறைந்த கேக் வகைகளை ஓடருக்கு பெற்றுக்கொள்ள..
06.95.85.75.59
Fb: Win Art Cake





பாரிஸ்
லாச்சப்பலில்
சங்கீதா அச்சகம்
நிலா
www.nilafrance.fr
2016
கலண்டர்கள்!!
புத்தம் புதிய டிசைன்களில்
அழகிய கலண்டர்களை
அச்சுப்பதிப்புடன் பெற்றுக்கொள்ள
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்
GOPAL AND CO
imprimerie KRISHNA
சங்கீதா அச்சகம்
Tél. : 01 44 72 08 94
2016
39, Bd de la Chapelle
75010 Paris
M° : La Chapelle
Tél. : 01 44 72 08 94
e-mail: sangeethafrance@gmail.com
Invitation
அழைப்பிதழ்கள், வாழ்த்து மடல், விளம்பரங்கள், பெயர்ப்பலகைகள், விளம்பரப்பதாகைகள் (பனர்), புத்தகங்கள், கலண்டர்கள்




# vendredi13

# நவம்பர் 13

**மீண்டும்** ஒரு முறை பிரான்ஸ் பயங்கரவாதத் தாக்குதல்களால் நிலைகுலைந்துள்ளது. ஒரே நாளில் குறிப்பிட்ட ஒரு சில மணி நேரங்களில் மிகத்திறமையாக திட்டமிடப்பட்ட தாக்குதல்களால் அப்பாவி மக்கள் 130 பேர் பலியாகியுள்ளனர். 300 பேர் காயமடைந்துள்ளனர். EI (Etat Islamique) பயங்கரவாதிகள் இத்தாக்குதல்களுக்கு உரிமை கோரியுள்ளனர். இத்தாக்குதல்களை அடுத்து பிரான்ஸ், பெல்ஜியம் என விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டன. 600க்கும் அதிகமான தேடுதல் வேட்டைகளை தொடர்ந்து பல கைதுகளும் இடம்பெற்றுள்ளன.

பல புலனாய்வு நிறுவனங்களால் குறிப்பாக மொறக்கோ புலனாய்வுத் துறையினரால் வழங்கப்பட்ட தகவல்களையடுத்து மேற்கொள்ளப்பட்ட Saint Denis அதிரடித்தாக்குதலில், 13 நவம்பர் தாக்குதல்களை முன்னின்று நடத்தியதாக கருதப்படும் Abdelhamid Abaaoud ம் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இத்தாக்குதல்களில் சம்பந்தப்பட்ட பலர் வெளியில் இருப்பதும், ஜிகாத் போராளிகளாக சிரியாவில் இன்னும் பலநூறு பிரான்ஸ் இளைஞர்கள் இருப்பதும், பாரபட்சம் இல்லாத தற்கொலைப் போராளிகளின் தாக்குதலும் மக்கள் மத்தியில் நிலைமைகளைச் சீராக விடாமல் ஒரு போர்க்களக் கலக்கத்தை தவிர்க்க முடியாமல் உண்டாக்கி வருகின்றது.

பிரான்சில் இன்னும் பல தாக்குதல்கள் குறிப்பாக இரசாயனக்குண்டுத் தாக்குதல்களை எதிர்நோக்கும் அபாயமுள்ளதென பாராளுமன்ற உரையில் பிரதமர் மனுவல் வால்ஸ் அச்சம் தெரிவித்துள்ளார். இவற்றிற்கெல்லாம் மேலாக அணுஆயுதத் தாக்குதல்களுக்கும் EI பயங்கரவாத அமைப்பு நீண்டகாலமாக திட்டமிட்டு வருகிறது என வெளியான தகவல்களும் பிரான்சை மேலும் இறுக்கமான நிலைக்குத் தள்ளியுள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்களை எவ்வாறு எதிர்கொள்வது என்ற கேள்வி பிரான்சில் பூதாகரமாக எழுந்து சாதாரண மக்கள் முதல் அரசியல் தலைவர்கள் வரை பதட்டத்தை உருவாக்கியுள்ளது.

அவசரகாலச்சட்டம் மூன்று மாத நீட்சியைப் பெற்றுள்ளது. தேசிய பாதுகாப்பு எச்சரிக்கை (Le plan Vigipirate) வரலாறு காணாத காலவரையறையற்ற நீட்சியைப் பெற்றுள்ளது. ஜனவரித்தாக்குதலுக்குப் பின்னர் உருவான இராணுவத்தினரின் 'Opération Sentinelle' பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ் பிரான்சில் பத்தாயிரம் இராணுவத்தினர் அவசரகாலப் பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இதில் பாரிசில் மட்டும் ஐயாயிரம் இராணுவத்தினர் கடமையில் உள்ளனர். பிரான்ஸ் எல்லைகள் அனைத்தும் கடுமையான கண்காணிப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.பாதுகாப்புத்துறையினருக்கு ஆயுதப்பாவனை அனுமதி என மேலும்பல கட்டுக்கடங்காத அனுமதிகள் பாதுகாப்புக்கருதி வழங்கப்பட்டுள்ளன.



தற்போதைய நிலை பிரான்சில் பாரிய பொருளாதாரச் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சியைத் தழுவியுள்ளது. டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பிராந்தியத் தேர்தல் பிரச்சாரங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதிபர் பிரான்சுவா ஹொலந் மீண்டும் ஒரு முறை அனைத்து கட்சித்தலைவர்களையும் தனித்தனியே அழைத்து ஆலோசனைகளை நடாத்தியுள்ளார். அதிபரால் விடுக்கப்பட்ட "அரசியல் பேதங்கள் இன்றி ஒன்றுபடுங்கள்" என்ற அழைப்பு மரின் லூப்பனாலும், சார்க்கோசியினாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதிபரின் பயங்கரவாதத்துக்கு எதிரான முன்நகர்வுகள் பாராட்டப்பட்டுள்ளன. பிரான்சில் பொருளாதாரம், அரசியல் நிலைகள் எவை எப்படி இருப்பினும் பிரான்ஸ் மக்கள் பயங்கரவாதத்துக்கு எதிராக Nous n'avons pas peur என உரத்தகோசத்துடன் ஒன்றிணைந்து நிற்கின்றனர்.



## Bataclan

1864ம் ஆண்டு சீனக்கட்டிடக்கலை வடிவமைப்பில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு இசை அரங்காகும். பாரிசின் மையப்பகுதியில் (75011) அமைந்துள்ள Bataclan பிரான்சின் தனித்துவமான நினைவுச்சின்னப்பட்டியலில் 1991 முதல் இடம்பிடித்துள்ளது.

Bataclan எனும் பெயர் 18ம் நூற்றாண்டின் பிரபல இசையமைப்பாளரான Offenbach ல் எழுதப்பட்ட ஒரு இசை நாடகக்கோர்வையின் பெயராகும். Ba-ta-clan இசை நாடகம் இன்றும் பிரபலமானது. 18ம் நூற்றாண்டின் இசை வடிவங்களில் ஒன்றான சீனத்தேய இசைவடிவ வகையைச் சார்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இசை நடன அரங்காக 18ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் நாடக அரங்காக, நடன அரங்காக, திரையரங்காக என பல மாற்றங்கள் பெற்று 1969ம் ஆண்டு புனரமைப்புச் செய்ய வேண்டி பூட்டப்பட்டது. மீண்டும் 14 வருடங்களின் பின்னர் 1983ம் ஆண்டே தனது கதவுகளைத் திறந்தது. 1983 முதல் இளைஞர்களின் ஆதிக்கம் தொடர் இசை நிகழ்வுகளால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டது. குறிப்பாக Rock and Roll இசை விரும்பிகளின் கலையரங்கமாக தன்னை மாற்றிக் கொண்டது.

Bataclan 2007 – 2008 பகுதியில் ஒரு தீவிர இனவாத யூத அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சில ஒன்றுகூடல்களால் பல அச்சுறுத்தல்களுக்குள்ளானது. குறிப்பாக பலஸ்தீன போராட்டக் குழுக்களால் கடுமையாக எச்சரிக்கப்பட்டது. Bataclan என்றால் "யூத இனத்தவர்கள்" என்பது இன்றும் தொடர்ந்து வரும் Bataclan ன் இருட்டுப்பக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




# புலம்பெயர்ந்தோர் வருகையைக் கட்டுப்படுத்த உச்சிமாநாடு

அண்மைய காலங்களாக ஐரோப்பாவில் தொடரும் புலம்பெயர்ந்தோரின் வருகையை ஐரோப்பிய ஒன்றியம் பலவிதமான அணுகு முறைகளைக்கொண்டு சீர்படுத்தி வருகின்றது.

அனுமதி முறைகள், உடனடி நிவாரணங்கள், ஒவ்வொரு நாடும் அனுமதிக்க வேண்டிய புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை எனப்பல முடிவுகள் எடுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் சில தடுப்புச் சுவர்கள், கம்பி வேலிகள், எல்லைப்புறக் கண்காணிப்புகள் எனப் புலம்பெயர்ந்தோரின் வருகையைக் கட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இருப்பினும் புலம்பெயர்ந்து வருவோரின் அதீத வருகையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாமல் ஐரோப்பிய ஒன்றியம் திண்டாடுகின்றது.

நிலவரங்கள் இவ்வாறிருக்க போர்க் காரண வருகைகளைத் தவிர்த்து ஏனைய சட்டவிரோத வருகைகளை அதன் ஆரம்பப் புள்ளிகளிலேயே தடுக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவெடுத்துள்ளது.

முதற்கட்டமாக ஆபிரிக்க கண்டத்திலிருந்து வெளியேறுவோரை அவர்களின் நாடுகளின் துணையுடன் கட்டுக்குள் கொண்டு வர முனைப்புக்காட்டப்படுகிறது.

ஐம்பதுக்கும் அதிகமான ஐரோப்பிய ஒன்றிய நாட்டுத்தலைவர்களும், ஆபிரிக்க நாட்டுத்தலைவர்களும் இணைந்து ஒன்று கூடிய உச்சிமாநாடு Malte ன் Valette நகரில் நவம்பர் 11, 12ஆகிய நாட்களில் இடம்பெற்றுள்ளது.

முதற்கட்டமாக ஐரோப்பிய ஒன்றியம் 1,8 மில்லியாட் யூரோக்களை வழங்குவதாக உறுதியளித்துள்ளது. அத்துடன் ஆபிரிக்க நாடுகளிடமும் தங்கள் பங்களிப்புகளை முன்வைத்து இத்தொகையை இரட்டிப்பாக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புலம்பெயர்வைத் தடுக்கக்கூடிய பல–புதிய திட்டங்களை பட்டியலிட்டு இரு தரப்பும் பல துரித முடிவுகளை எடுத்துள்ளன.

ஆபிரிக்க நாட்டு குடிவரவு குடிஅகல்வு அதிகாரிகள் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளுடன் இணைந்து செயற்பட்டால் அதீத சட்டவிரோத வருகைகளைத் தடுக்க முடியும் என நம்புகிறார்கள்.

ஆபிரிக்க நாடுகளால் கோரப்பட்ட

1. சட்டரீதியாக அனுமதி பெற்ற வருகைகளை கூடுதலாக அனுமதிக்கவும்

2. கல்விக்காக அல்லது உயர் படிப்புகளுக்காக ஐரோப்பாவிற்குள் வருவோருக்கான உதவித்தொகையை இரட்டிப்பாக்கவும்.

என்ற இரண்டு கோரிக்கைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

மாநாட்டில், அதே வேளையில் சில ஆபிரிக்கத்தலைவர்கள் தங்கள் கோபங்களையும் பதியத்தவறவில்லை. ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் ஏன் ஆபிரிக்க புலம்பெயர்ந்தோரில் மட்டும் கண்ணாக இருக்கின்றது. மற்றைய புலம் பெயர்ந்தோரோடு ஒப்பிட்டால் ஆபிரிக்கர்கள் வெறும் சிறு தொகையினர்மட்டுமே என தங்கள் ஆதங்கத்தையும் சற்றே கோபத்துடன் பதிவுசெய்துள்ளனர். ●






இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு


பாரிஸ் மாநகரில் ஓர் அறிவியற் களஞ்சியம்
பாரிஸ்
அறிவாலயம்
ஐரோப்பாவின் முன்னணி புத்தகசாலை
16வது ஆண்டில்
இலங்கை,இந்திய
சஞ்சிகைகள் பத்திரிகைகள்
வாரம் தோறும்
பெற்றுக்கொள்ளலாம்!
2010
DICTIONNAIRE
de poche 39,000 mots
கையகராதி
39,000 சொற்கள்
Français - Tamoul
P. Chanemougassoundiram
Editions Amouda
Pondichéry - 605013. Inde
Chanemougassoundiram
Questions pour nationalité française Avec réponses
பிரெஞ்சு குடியுரிமை
பெறுவதற்கான
கேள்விகளுக்குப் பதில்கள் –
கடிதம் எழுதும் முறையுடன்
EDITIONS AMOUDA
Pondichéry - 605 013
Inde
பிரான்ஸ் குடியுரிமை பெற
நீங்கள் படிக்கவேண்டிய
கேள்வி-பதில் நூல்
புதிய வெளியீடு
விற்பனையில் உள்ளது!
ஐரோப்பிய நாடுகள் எங்கும்
உங்களுக்குத் தேவையான
நூல்களை நாம் அனுப்பிவைப்போம்
Tél.: 01 44 72 03 34 - Fax : 01 44 72 03 35
Paris Arivalayam
7, rue Perdonnet - 75010 Paris
M° : La Chapelle / Gare du Nord - Email : parisarivalayam@gmail.com



# பூமி வெப்பமடைகிறது...

# எச்சரிக்கை!

**"உருகும் வீடு"** (Maison Fond)



**"சிறகு முளைத்த கரடி"** (Angel Bear)

பூமி வெப்பமடைதலால் ஏற்படப்போகும் ஆபத்துக்களை எச்சரிக்கும் விதமான படைப்புகளே "உருகும் வீடு" மற்றும் "சிறகு முளைத்த கரடி" போன்ற படைப்புகள்.

Gare du Nord புகையிரத நிலையத்துக்கு முன் பகுதியில் இவ்விரண்டு பிரமாண்டமான கலைப்படைப்புகளையும் நீங்கள் காணலாம். சமகால கலைப்படைப்பாளிகளில் ஒருவரான Leandro Erlich அவர்களும், சிற்பக்கலை, ஓவியம் எனப் பலதளங்களில் தனது ஆளுமையைப் பதிவு செய்து வரும் Richard Texier ம் தமது படைப்புகளை நிறுவியுள்ளனர்.

Leandro Erlich ஆர்ஜன்ரீனாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஜப்பான், ஜேர்மனி, அமெரிக்கா, பிரேசில், ஸ்பெயின் எனப் பல நாடுகளில் மிகப்பிரமாண்டமாக தனது கைவண்ணத்தைப் பதிவு செய்துள்ளார். Gare du Nord ல் நிறுவப்பட்டுள்ள இவரின் 6, 9 மீற்றர் உயர "உருகும் வீடு" (Maison Fond) பலரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. புவி வெப்பமடைதலின் தீவிரத்தை உணர்த்துவதே இப்படைப்பின் நோக்கம்.

இரண்டாமவர் 7,5 மீட்டர் உயரமான "சிறகு முளைத்த கரடி" (Angel Bear) என்று பெயர்பட சிகப்பு நிறக்கரடியைக் கம்பீரமாக நிறுத்தியுள்ளார். இச்சிற்பம் 4,8 தொன் எடையில் உலோகத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. புவி வெப்பமடைதலால் தற்போது அழிந்துவரும் நிலையிலிருக்கும் பனிக்கரடி ஒன்று மனிதர்களை பார்த்து திட்டும் தோரணையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு படைப்புகளுமே பாரிசில் இடம்பெறவிருக்கும் புவி வெப்பமடைதல் தொடர் சர்வதேச மாநாட்டை முன் வைத்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவே நிறுவப்பட்டுள்ளதாக சிற்பத்தைத் திறந்து வைத்துப் பேசிய பாரிஸ் மேயர் Anne Hidalgo தெரிவித்துள்ளார்.






Leandro Erlich





Richard Texier



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு


சிறந்த சேவைகளுடன் குறைந்த விலையில்
கொழும்பு, சென்னை செல்வதற்கு...
KUWAIT AIRWAYS
40 Kg பயணப் பொதி : பெரியவர்கள், சிறுவர்களுக்கு
10 Kg பயணப் பொதி : குழந்தைகளுக்கு (0-2 வயது)
அனுமதிக்கப்படும்
விபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு
உங்கள் வழமையான பயணமுகவர்கள் அல்லது
KUWAIT AIRWAYS
17, Avenue George V
75008 Paris
Tél : 01 47 20 75 15
email : par@kuwaitairways.com
www.kuwaitairways.com
KUWAIT AIRWAYS
Since 1954
புதியரக விமான சேவை Airbus 330 - 200




# Elections Régionales - 2015

## பிரான்ஸ் பிராந்தியங்களின் தேர்தல்

பிராந்திய சபைகளிற்கான தேர்தல் மார்கழி 6 மற்றும் 13ம் திகதிகளில் இடம்பெற உள்ளன. 2015 பங்குனியில் இருந்து பிரான்சில் பிராந்தியங்களின் எண்ணிக்கை 22 இல் இருந்து 13 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள் பாராளுமன்றத்தின் மூலம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பிரான்சினது பொது நிர்வாக நடைமுறைகளை முறையாகநிறைவேற்று வதற்காக பிராந்தியங்களின் எல்லைகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. பிரான்ஸ் மற்றும் குஆடலூப் (Guadeloupe) - (41 members) றீயூனியன் (Réunion) - (45 members) தீவுகளில் பிராந்திய சபைகளிற்கான தேர்தல் இடம்பெறும்.

பிராந்திய சட்ட சபைக்கான தேர்தல் அதேநாளில் கோர்ஸ் (Corse - 41 members) தீவிலும் நடைபெறும்.

குயான் (Guyane) மற்றும் மாட்டினிக் (Martinique) தீவுகளிலும் பிரான்ஸ் போன்றே அதே நாளில் தேர்தல்கள் நடைபெறும். இவற்றிற்கு மாத்திரம் வட்டார ரீதியில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

2015ம் ஆண்டு மயொத் (Mayotte) இல் பிராந்திய தேர்தல் நடைபெறமாட்டாது. பிரான்சிற்கு வெளியில் உள்ள மயொத் மாவட்டம் பிரான்சின் ஐந்தாவது கடல் கடந்த மாவட்டமாகும். பிரான்சில் இறுதியாக அமைந்த இணைக்கப்பட்ட மயொத் மாவட்டம் பிரான்சினது 101வது மாவட்டமாகத் திகழ்கின்றது.

376 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள இந்த மயொத் தீவில் அண்ணளவாக 2, 25, 000 மக்கள் வாழ்கின்றனர். இம் மக்கள் சுவாகிலி (Swahili), மகோர் (Mahor), மல்காச் (malgache) போன்ற மொழிகளைப் பேசுகின்றனர்.

Union des anciens élèves tamouls de Sri Lanka - France

இலங்கைத் தமிழ் பழைய மாணவர் ஒன்றியம்

### கருத்தரங்கு

பொருள் : **பிரான்சின் கல்விமுறைபற்றி தமிழ்ப் பெற்றோர் அறியவேண்டியவை**

(குறிப்பாக உயர்கல்வி)

காலம் : **13.12.2015**

~~22.11.2015~~

ஞாயிறு மாலை 4.00 மணி


இடம் :
5, Rue Pierre l'Ermite
75018 PARIS
Métro: La Chapelle

ஆர்வமுள்ள அனைவரையும்
அன்போடு அழைக்கிறோம்!

தொடர்புகளுக்கு
06.68.81.63.62
06.98.58.19.12
06.61.77.82.76

**இலங்கைத் தமிழ் பழையமாணவர் ஒன்றியம் - பிரான்ஸ்**

**டேமியன் சூரி**
**அவர்களின்**
**யாழ்ப்பாணத்துக்கூத்துகள்**
(நாட்டுக்கூத்துப் பாடல்கள்)



வெளியீடு :
திருமறைக்கலாமன்றம்

பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தால் நடாத்தப்படும் கலைவண்ணம் 2015 நிகழ்ச்சியில்
**கலைஞர் ரி. தயாநிதி**
அவர்கள் திருமறைக்கலாமன்றத்தினால் கௌரவிக்கப்பட்டார்.



நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

சங்கீதா அச்சகம்
39, Bld. de la Chapelle - 75010 PARIS

ரூபி அச்சகம்
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை -பாரிஸ் 17

Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

யாழ் இறைச்சிக்கடை
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

ராக ஜோதி மளிகை
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

மாயவர் - மொழிபெயர்ப்பு
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

தமிழாலயம்
19, Rue Cail, 75010 Paris

மாலா மளிகை
4, Place de Salengro - Garges les Gonesse

அறிவாலயம் புத்தகசாலை
7, Rue Perdonnet (M°: La Chapelle)

Karan Coiffure
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

ஞானமணி பல்பொருள் அங்காடி
218, Rue. Anatole Francy - 93 Drancy

அம்பாள் ஸ்ரோஸ்
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்
Le Blanc Mesnil

அஷ்டலக்சுமி கோயில்
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

Sagana Coiffure
64, Rue Louis Blanc (M°: La Chapelle)

கிருஷ்ணா அச்சகம்
73, Rue Doudeauville - 75018 Paris

GADS EXO
14, Bis, rue Emile zola 93400 St.Ouen
M°: Pte de St. Ouen)

அல்லையூர் செய்திகளை அறிய..
www. Allaiyoor.com

மகிழ்ச்சியில்
மிகப்பெரிய மகிழ்ச்சி
பிறரை மகிழ்ச்சிப் படுத்திப் பார்ப்பதுதான்!



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# La Vélodrôme

## பிரான்சின் சிறந்த உதைபந்தாட்ட மைதானம்

பிரான்சின் தெற்கில் அமைந்துள்ள மார்செய் நகர உதைபந்தாட்ட மைதானமான La Vélodrôme , பிரான்சின் அதிசிறந்த உதைபந்தாட்ட மைதானம் என்ற தகமையைப்பெறுகிறது. உலகிலுள்ள அனைத்து உதைபந்தாட்ட மைதானங்களும் வரலாறு, சூழல், கொள்திறன், கட்டிடக்கலை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு இப்பெருமை வழங்கப்படுகின்றது. இம் மைதானம் உலக வரிசையிலும் பதினான்காவது இடத்தைப் பிடித்துத்துள்ளது.

பிரான்சின் சிறந்த மைதானம் என்றால் La Stade de France தான் என்ற கணிப்பை, மார்செய் மைதானம் தகர்த்துள்ளது. உதைபந்தாட்டமென்றாலே பாரிஸ் ரசிகர்களுக்கும் மார்செய் ரசிகர்களுக்கும் எப்போதும் ஆகாப்பகை. இந்நிலையில் இத்தெரிவு பலரையும் புருவம் உயர்த்த வைத்துள்ளது.

உலக அரங்கில் முதல் மூன்று இடங்களையும் முறையே ஆர்ஜன்ரீனா, பார்சலோனா மற்றும் இங்கிலாந்தின் வெம்பிலி மைதானங்கள் பிடித்துள்ளன. Stade de France க்கு 16வது இடம். இத்தெரிவுகளை இங்கிலாந்தின் உதைபந்தாட்டம் சார் இதழான FourFour Two இதழ் ஆய்வின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.


V.S. கிருஷ்ணபிள்ளை (மாயவர்)

மொழிபெயர்ப்பாளர்

சகல நீதி, நிர்வாக சேவைகளால் ஏற்றுக்கொள்ளப்படும் மொழிபெயர்ப்புகள் செய்து கொடுக்கப்படும்.

புதிய முகவரி :

7, Rue Perdonnet - 75010 Paris

M°: La Chapelle / Gare du Nord

[அறிவாலயம் புத்தகசாலைக்கு அருகில்]


Tél./ Fax : 09.82.24.78.98

Mob : 06.86.38.10.57





## நிலா குறுக்கெழுத்துப் போட்டி – 20



**இடமிருந்து வலம்**

1. யப்பானிய மொழிச்சொல்லான சுனாமியின் தமிழ் வடிவம் (6)
5. இளவேனில் காலத்தை இப்படியும் அழைக்கலாம் (7)
9. கருப்பைக்குள் இருக்கும் குழந்தையின் தொடக்கநிலை (2)
11. காலின் அடிப்பகுதி (3)
15. டோக்கியோவை தலைநகராகக் கொண்ட நாடு (4)
17. இலங்கையின் தெற்கில் அமைந்துள்ள 25 மாவட்டங்களில் ஒன்று (4)

**வலமிருந்து இடம்**

13. ஒரு கடலை வகை (4)
18. அண்மையில் வெளியாகி மாபெரும் வெற்றியைப் பெற்ற S. S ராஜமௌலி இயக்கத்தில் வெளியான அரச திரைப்படம் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. செருக்கு, திமிர் அல்லது மமதை என்றும் சொல்லலாம் (4)
2. பிதற்றல் அல்லது உளறுவதை இவ்வாறும் அழைக்கலாம் (4)
3. அறுசுவைகளில் ஒன்று. உறைப்பு எனலாம் (குழம்பியுள்ளது) (3)
4. வாரத்தில் ஒரு நாள், கிரகங்களில் ஒன்று (2)
6. 16 வயதினிலே திரைப்படத்தில் கமலகாசன் நடித்த பாத்திரம் (4)
7. வில்லுக்கு இலக்கணமான அருச்சுனனை இவ்வாறும் அழைக்கலாம் (5)
8. வள்ளலார் என அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் பாடிய 5818 பாடல்களின் தொகுப்பு (6)
10. அண்மையில் உயிர்துறந்த தமிழ்ச்சினிமாவின் ஆச்சி (4)
12. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு சிறப்பான பணிகளைச் செய்த வீரமாமுனிவர் பிறந்த நாடு (4)
14. இது சிறிது என்றாலும் காரம் பெரிது என்பார்கள் (3)
16. கனிமங்களின் சேர்க்கையினால் இயற்கையாக உருவாகுபவை (2)

**கீழிருந்து மேல்**

9. தாள வாத்திய இசைக்கருவிகளில் ஒன்று (குழம்பியுள்ளது) (3)

✔ உங்கள் பதில்களை 10 தை 2016 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !

நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.19ல் பரிசு பெறுபவர்கள்.

1. N. புஸ்பநாதன் (Neuilly-sur-Marne)
2. சந்திரிகா கமலநாதன் (Meulan-en-Yvelines)
3. சாதனா ராகவன் (Bagnolet)

**சரியான விடை எழுதியவர்கள் :**

- ஜேம்ஸ் ஜெனோலின் சியானா (Argenteuil)
- சசிகலா சிவசுதக்குருக்கள் (Le Blanc-Mesnil)
- தாவீது ஞானசிங்காரம் (Le Blanc-Mesnil)